# ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2022.06.21 |


## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2022 மே இல் மேலும் அதிகரித்தது

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (தேநுவிசு, 2013=100)[1] ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2022 ஏப்பிறலின் 33.8 சதவீதத்திலிருந்து 2022 மே இல் 45.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலான பணவீக்கத்தின் இத்தகைய அதிகரிப்பானது உணவு மற்றும் உணவல்லா ஆகிய இரு வகைகளினதும் மாதாந்த அதிகரிப்பினால் தூண்டப்பட்டிருந்தது. அதற்கமைய, உணவுப் பணவீக்கம், (ஆண்டிற்கு ஆண்டு) 2022 ஏப்பிறலின் 45.1 சதவீதத்திலிருந்து 2022 மே இல் 58.0 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை, உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2022 ஏப்பிறலின் 23.9 சதவீதத்திலிருந்து 2022 மே இல் 34.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.

| பணவீக்கம் | ஏப்பிறல் 2022 | மே 2022 |
|---|---|---|
| **முதன்மை** | | |
| சுட்டெண் பெறுமதி | 190.3 | 208.7 |
| மாதாந்த மாற்றம் (%) | 10.2 | 9.7 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 33.8 | 45.3 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் (%) | 13.0 | 16.3 |
| **மையம்** | | |
| சுட்டெண் பெறுமதி | 182.3 | 197.9 |
| மாதாந்த மாற்றம் (%) | 9.6 | 8.6 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 27.9 | 37.7 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் (%) | 10.2 | 13.0 |

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம், 2022 மே இல் 9.67 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. இதற்கு, முறையே 5.41 சதவீதத்தினையும் 4.26 சதவீதத்தினையும் கொண்ட உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்கள் காரணமாக அமைந்தன. அதற்கமைய, உணவு வகையினுள், அரிசி, பால்மா, காய்கறிகள், உடன் மீன் மற்றும் பாண் என்பவற்றின் விலைகளில் மாத காலப்பகுதியில் அதிகரிப்புக்கள் பதிவாகின. மேலும், உணவல்லா வகையினுள் மாதகாலப்பகுதியில் போக்குவரத்து (பெற்றோல், டீசல் மற்றும் பேருந்துக் கட்டணம்), வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருள் (பராமரிப்பதற்கான பொருட்கள்/நிர்மாணம் மற்றும் திரவப் பெற்றோலிய எரிவாயு), தளபாடம், வீட்டுச்சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டலகுப் பேணுகை அத்துடன் நானாவிதப் பொருட்கள் மற்றும் பணிகள் (கார் காப்புறுதி மற்றும் சவர்க்காரம்) போன்ற துணை வகைகளில் விலைகளில் அதிகரிப்புக்கள் அவதானிக்ககப்பட்டன.

தேநுவிசு அடிப்படையிலான பணவீக்கத்தின் அசைவு (ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம்)




தேநுவிசு இல் மாதாந்த சதவீத மாற்றத்திலான பங்களிப்பு




அதேவேளை, ஆண்டுச் சராசரி பணவீக்கம் 2022 ஏப்பிறலின் 13.0 சதவீதத்திலிருந்து 2022 மே இல் 16.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.

பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம், (ஆண்டிற்கு ஆண்டு) 2022 ஏப்பிறலின் 27.9 சதவீதத்திலிருந்து 2022 மே இல் 37.7 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை, ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம், 2022 ஏப்பிறலின் 10.2 சதவீதத்திலிருந்து 2022 மே இல் 13.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

[1] தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது (2013=100) இலங்கையின் அனைத்து மாகாணங்களிலுமுள்ள வீட்டலகுகளினால் கொள்வனவு செய்யப்படும் பொருட்களின் மற்றும் சேவைகளின் விலைகளிலுள்ள சராசரி மாற்றங்களை எடுத்துக்காட்டுவதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

## துணை வகைப்படுத்தல் (ஆண்டிற்கு ஆண்டு மாற்றம்) அடிப்படையில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம்




## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள் (2013=100)

| காலம் | | சுட்டெண் | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | மாதம் | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மையம்) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மையம்) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மையம்) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மையம்) |
| 2021 | மே | 143.6 | 143.7 | 1.0 | 0.8 | 6.1 | 4.2 | 5.4 | 4.4 |
| | யூன் | 145.7 | 144.6 | 1.5 | 0.6 | 6.1 | 4.1 | 5.4 | 4.4 |
| | யூலை | 146.6 | 145.6 | 0.6 | 0.7 | 6.8 | 4.4 | 5.4 | 4.4 |
| | ஓகத்து | 147.1 | 146.5 | 0.3 | 0.6 | 6.7 | 4.7 | 5.5 | 4.4 |
| | செத்தெம்பர் | 147.5 | 147.2 | 0.3 | 0.5 | 6.2 | 4.8 | 5.5 | 4.4 |
| | ஒத்தோபர் | 150.6 | 150.6 | 2.1 | 2.3 | 8.3 | 7.2 | 5.7 | 4.6 |
| | நவெம்பர் | 155.3 | 153.0 | 3.1 | 1.6 | 11.1 | 8.8 | 6.2 | 5.0 |
| | திசெம்பர் | 161.0 | 155.7 | 3.7 | 1.8 | 14.0 | 10.8 | 7.0 | 5.5 |
| 2022 | சனவரி | 166.0 | 159.2 | 3.1 | 2.2 | 16.8 | 12.9 | 8.1 | 6.2 |
| | பெப்புருவரி | 167.8 | 161.2 | 1.1 | 1.3 | 17.5 | 14.1 | 9.3 | 7.1 |
| | மாச்சு | 172.7 | 166.3 | 2.9 | 3.2 | 21.5 | 17.3 | 10.6 | 8.2 |
| | ஏப்பிறல் | 190.3 | 182.3 | 10.2 | 9.6 | 33.8 | 27.9 | 13.0 | 10.2 |
| | மே | 208.7 | 197.9 | 9.7 | 8.6 | 45.3 | 37.7 | 16.3 | 13.0 |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்